செய்திப் பணிப்பாளர் /செய்திப் பதிப்பாசிரியர் 21.06.2017

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : மே 2017


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**


2017 மே மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2017 ஏப்ரல் மாதத்தில் 8.4% இருந்து 2017 மே மாதத்தில் 7.1% ஆக குறைவடைந்துள்ளது என தெரிவித்தார். 2017 மே மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 4.6%, 2.5% ஆக இருந்த அதேவேளை, 2016 மே மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 2.1%, 3.1% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாதத்தில் பதிவாகிய 121.0 இருந்து 2017 மே மாதத்தில் 121.8 ஆக அதிகரித்துள்ளது. இது, முந்திய மாதமான 2017 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மே மாதத்தில் 0.8 சுட்டெண் புள்ளி அல்லது 0.7 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதாந்த மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.43%ஆல் மற்றும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.21%ஆல் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம் மரக்கறி, சின்ன வெங்காயம், புதிய மீன், அரிசி, தேங்காய், கருவாடு, வெள்ளைப்பூடு மற்றும் உருளைக்கிழங்கு, ஆகியவற்றின் விலைகள் அதிகரித்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் குறைந்த செலவுப் பெறுமதியானது வாழைப்பழம், பப்பாசி, முட்டை, சீனி மற்றும் அன்னாசி என்பன பொருட்டு பதிவாகியது.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2017 மே மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'போக்குவரத்து', 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்', 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு' மற்றும் 'ஆடையும் காலணியும்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 'சுகாதாரம்', 'கல்வி' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகள் பொருட்டு செலவுப் பெறுமதியில் மிகச் சிறிதளவு அதிகரிப்புகள் பதிவாகின. இருப்பினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடும்போது 'அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்' உணவல்லாப்பொருள் பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் வீழ்ச்சி பதிவாகியது. 'தொடர்பாடல்' மற்றும் 'களியாட்டமும் கலாசாரமும்' ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின் மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2016** | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | **ஒக்ரோபர்** | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| **2017** | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்